பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

31 08 2024 **SATURDAY** **6.45 AM**

மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- சென்னை – நாகர்கோவில் இடையேயான வந்தேபாரத் ரயில் சேவையை பிரதமர் திரு நரேந்திர மோடி காணொலி வாயிலாக இன்று தொடங்கிவைக்கிறார்.
- தொழிலாளர் நலத்துறை சீர்திருத்தங்களை வெற்றிகரமாக அமல்படுத்துவதில் மாநிலங்கள் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.
- தமிழகத்தில் திறன்மிகு கைவினைக்கலைஞர்களுக்கு உலகளாவிய வாய்ப்புகளை மாநில அரசு உருவாக்கித் தருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- தமிழில் இருந்து பிற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நூல்களை தேர்ந்தெடுத்து உலகில் உள்ள 100 பல்கலைக்கழகங்களுக்கு அனுப்ப மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- ஃபார்முலா-4 கார்பந்தயம் சென்னையில் இன்று தொடங்குகிறது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>>**

சென்னை – நாகர்கோவில் இடையேயான வந்தேபாரத் ரயில் சேவையை பிரதமர் திரு நரேந்திர மோடி காணொலி வாயிலாக இன்று தொடங்கிவைக்கிறார்.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் நடைபெறவுள்ள இதுதொடர்பான விழாவில், மாநில ஆளுநர் திரு ஆர் என் ரவி, தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல்.முருகன் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இந்த ரயில் சென்னை சென்ட்ரலில் இருந்து பிற்பகல் பனிரெண்டரை மணிக்கு புறப்பட்டு, நாகர்கோவிலுக்கு இரவு ஒன்பது முப்பதுக்கு சென்றடையும்.

இதேபோல், மதுரை – பெங்களூரு இடையேயான வந்தேபாரத் ரயில் சேவையையும் பிரதமர் காணொலி வாயிலாக இன்று தொடங்கிவைக்கிறார்.

இந்த இரண்டு ரயில்களின் சேவை நாளை மறுநாள் முதல் தொடங்கும் என்றும் தெற்கு ரயில்வே கூறியுள்ளது.

<<<<<<>>>>>>

தொழிலாளர் நலத்துறை சீர்திருத்தங்களை வெற்றிகரமாக அமல்படுத்துவதில் மாநிலங்கள் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்று மத்திய தொழிலாளர் நலத்துறை இணையமைச்சர் திருமதி ஷோபா கரந்தலாஜே கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நேற்று நடைபெற்ற, தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட தென் மாநிலங்களின் தொழிலாளர் நலத்துறை பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் பேசிய அவர், அமைப்புசாரா தொழிலாளர்களின் நலன்களை மாநில அரசுகள் உறுதிபடுத்த வேண்டும் என்று கூறினார்.

தொழிலாளர்களுக்கு மத்திய அரசு மேற்கொண்டுவரும் சமூக பாதுகாப்புத் திட்டங்களை இ-ஷ்ரம் வலைதளம் மூலம் எளிதாக அறிந்துகொள்ள முடியும் என்பதால், அதுகுறித்து தொழிலாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

<<<<<<>>>>>>

மரபுகளை நவீனத்துடன் இணைப்பதன் வாயிலாக தமிழகத்தில் திறன்மிகு கைவினைக்கலைஞர்களுக்கு உலகளாவிய வாய்ப்புகளை மாநில அரசு உருவாக்கித் தருவதாக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் அதிகாரப்பூர்வ சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவர், உள்ளூர் கைவினைக்கலைஞர்களை ஊக்குவிப்பதற்காக "ஸ்டார்ட்-அப்-தமிழ்நாடு-இன்-தடம்" எனும் முக்கியமான முன்னெடுப்பை அறிமுகம் செய்ததை குறிப்பிட்டு சமூக வலைதளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவில் தாம் சந்தித்த முதலீட்டாளர்களுக்கு "தடம் -தமிழ்நாட்டின் பொக்கிஷங்கள்" எனும் பெட்டியினை நினைவு பரிசாக வழங்கியதாகவும், நமது பண்பாட்டு மரபு பாதுகாக்கப்படுவதையும், வளர்ச்சி பெறுவதையும் தடம் உறுதி செய்யும் என்றும் திரு மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலையில் இரண்டு நாள் கோடை விழாவை பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எ வ வேலு, சுற்றுலாத்துறை அமைச்சர் திரு ராமச்சந்திரன் ஆகியோர் நேற்று தொடங்கிவைத்தனர்.

கோடை விழாவை முன்னிட்டு, தோட்டக்கலைத்துறை சார்பில் மலர் கண்காட்சி மற்றும் காய்கறி கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது.

பல்வேறு துறைகளின் சார்பில் சுமார் ஏழாயிரம் பயனாளிகளுக்கு ஒன்பது கோடியே 54 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் திரு எ வ வேலு, பழங்குடியின மக்கள் பயனடையும் வகையில் கோடை விழாவில் ஐந்தாயிரத்து 129 பயனாளிகளுக்கு பழங்குடியின சாதிச்சான்றிதழ் வழங்கப்படுவதாக கூறினார்.

சுற்றுலாத்துறையை மேம்படுத்த மாநில அரசு எடுத்த நடவடிக்கையால் தமிழகத்திற்கு வரும் சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் திரு ராமச்சந்திரன் கூறினார்.

முன்னதாக, ஜமுனா மரத்தூரில் இருந்து போளுர், மேல்பட்டு, நீப்பலாம்பட்டு ஆகிய பகுதிகளுக்கு நகரப்பேருந்துகளை அமைச்சர்கள் தொடங்கிவைத்தனர்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் இன்று அனைத்து ரேஷன் கடைகளும் இயங்கும் என்று மாநில அரசு அறிவித்துள்ளது.

வழக்கமாக மாதத்தின் கடைசி நாளில் பொருட்கள் விநியோகம் செய்யப்படமாட்டாது. ஆனால் அனைத்து அத்தியாவசியப் பொருட்களும் மக்களுக்கு தங்கு தடையின்றி கிடைப்பதற்காக இன்று ரேஷன் கடைகள் இயங்கும் என்று உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அறிவித்துள்ளது.

இம்மாதத்திற்கான பொருட்களை பெறாதவர்கள், இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தமிழில் இருந்து ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன், சீனா போன்ற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட சிறந்த நூல்களை தேர்ந்தெடுத்து உலகில் உள்ள 100 பல்கலைக்கழகங்களுக்கு அனுப்ப மாநில அரசு முடிவு செய்துள்ளது.

சென்னையில் நேற்று நடைபெற்ற இந்த நூல்களை தேர்வு செய்வதற்கான குழுவின் கூட்டத்தில் சங்க இலக்கியம் முதல், நவீன இலக்கிய படைப்புகள் வரையிலான மொழிபெயர்ப்பு நூல் பட்டியல் தயாரித்து வலைதளம் உருவாக்கி பதிவேற்றம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் மொழி, தமிழ் இலக்கியம், தமிழ் பண்பாடு, தமிழர் நாகரீகம் போன்றவற்றுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் இந்த நூல்கள் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

சென்னை பிராட்வேயில் பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து முனையம் 822 கோடி ரூபாய் செலவில் அமைக்க மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இத்திட்டத்தை சென்னை மெட்ரோ சொத்து மேலாண்மை நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.

இந்த பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து பேருந்து நிலையம், வாகன நிறுத்தத்திற்கு அடித்தளத்தில் இரண்டு அடுக்கு கட்டிடமும், இரண்டு அடுக்கு பேருந்து நிறுத்தமும், ஆறு அடுக்கு வணிக வளாகம் உள்ளிட்ட பத்து அடுக்குகள் கொண்ட கட்டிடமாக கட்டப்பட உள்ளது.

ஆட்டோ மற்றும் டாக்சிகளுக்கான ஒருங்கிணைந்த வசதி, மின்சார பேருந்துகளை சார்ஜ் செய்வதற்கான வசதி, உயர்நீதிமன்ற மெட்ரோ ரயில் நிலையம் மற்றும் கோட்டை குறளகம் ரயில் நிலையத்தை எளிதாக கடக்கும் வகையில் ஆகாய நடைபாதை உள்ளிட்ட வசதிகள் இந்த பேருந்து நிலையத்தில் செய்துதரப்பட உள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>>

வங்கக்கடலில் உருவாகியுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி, மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைந்து வடக்கு ஆந்திரா மற்றும் தெற்கு ஒடிஷா நோக்கி நகரும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, தமிழகத்தின் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையை பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் நேற்றிரவு சுமார் ஒருமணிநேரம் பலத்த மழை பெய்தது.

இதன் காரணமாக, நெடுஞ்சாலைகளில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

<<<<<<>>>>>>

*இருவரிச் செய்திகள்*

**Burkina Faso**–வில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு ஐ நா பாதுகாப்பு கவுன்சில் கண்டனம் தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>>

அந்நாட்டின் எக்ஸ் சமூக வலைதளத்திற்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

திரிபுரா மாநிலத்தில் மழை வெள்ளம் காரணமாக உயிரிழந்தோர் குடும்பத்திற்கு தலா இரண்டு லட்சம் ரூபாயும், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாயும் பிரதமர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>>

தேனி மாவட்டத்தில் வராக நதியின் குறுக்கே நான்கு கோடியே 53 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுவரும் உயர்மட்ட பாலப்பணிகளை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு ஐ பெரியசாமி நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>>>

கன்னியாகுமரி மாவட்டத்தில் அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் மாற்றுத்திறனாளிகள் சிரமம் இல்லாமல் வந்து செல்லும் வகையில் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தித்தர வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் திருமதி அழகுமீனா அறிவுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>>

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்படும் மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சியர் திரு பிரசாந்த் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>>

தஞ்சாவூர் மாவட்டம் திருக்காட்டுப்பள்ளியில் 300 ஆண்டுகள் பழமை வாய்ந்த பூண்டிமாதா பேராலய ஆண்டு திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கியது.

<<<<<<>>>>>>>

சென்னையில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் வகையில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் மற்றும் வெள்ளத்தடுப்புப்பணிகளை தலைமைச்செயலர் திரு முருகானந்தம் நேற்று நேரில் ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஃபார்முலா-4 கார்பந்தயம் சென்னையில் இன்று தொடங்குகிறது.

தெற்காசியாவில் முதல் முறையாக சென்னையில் இரவு நேரத்தில் சாலையில் இந்த பந்தயம் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் செய்துள்ளது.

தீவுத்திடல், போர் நினைவுச்சின்னம், நேப்பியார் பாலம், சுவாமி சிவானந்தா சாலை, அண்ணா சாலை வரை மூன்று புள்ளி ஐந்து கிலோமீட்டர் தூரத்திற்கு பாதை அமைக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான இறுதிக்கட்டப்பணிகளை மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் நேற்றிரவு ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>>>

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இன்றும் பதக்கங்களை வெல்லும் முனைப்பில் இந்திய அணியினர் பல்வேறு போட்டிகளில் பங்கேற்கிறார்கள்.

பத்து மீட்டர் ஏர் ரைஃபிள் துப்பாக்கிச்சுடும் போட்டியின் ஆடவர் பிரிவு தகுதிச்சுற்றில் இந்தியாவின் ஸ்வருப் மகாவீரும், மகளிர் பிரிவில் ரூபினா பிரான்சிஸும் பங்கேற்கிறார்கள்.

ஆடவர் ஈட்டி எறிதல் இறுதிப்போட்டியில் இந்தியாவின் பிரவீன்குமார் பங்கேற்கிறார்.

<<<<<<>>>>>>>